## தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்றுக் குழுமம்

## தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

## தேசிய தன்னார்வ இரத்ததான தினம்- 2016

## பாராட்டுச் சான்றிதழ்

2015 ஆம் ஆண்டில் அரசு இரத்த வங்கிகளுக்கு இரத்ததான முகாம்கள் நடத்திக் கொடுத்தும் தேவைப்படும் நோயளிகளுக்கு இரத்தம் அளித்தும் அவர்கள் வாழ்வை ஒளிரச்செய்ததற்காக

............Priyadharshini Engg. College, Vaniyambadi............

என்கின்ற அமைப்பை மனதாரப் பாராட்டுகின்றோம்.

துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் (ம)
மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

NACO

மாவட்ட ஆட்சியர்
வேலூர் மாவட்டம்.

---

## இரத்ததான உறுதி மொழி

"இரத்ததானம் செய்வதில் முதல் மாநிலமாக திகழும் தமிழ்நாட்டில் பிறந்தமைக்கு நான் பெருமைப்படுகிறேன் என்றும், மனித உயிர்வாழ மனநிறைவுடன் இரத்ததானம் செய்து மகத்தான உயிர்களைக் காப்பேன் என்றும், தொடர் இரத்தக்கொடையாளராய் இருந்து, வேற்றுமையுள்ள சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குவேன் என்றும், இரத்த தானம் பற்றி தெரிந்த சரியான தகவல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து அவர்களையும், இரத்தக்கொடையாளராய் மாற்றுவேன் என்றும், இரத்த தானம் பற்றிய தவறான எண்ணங்களை களைவேன் என்றும். இரத்ததானசேவை மேலோங்கி வளர, உண்மையாக பாடுபடுவேன் என்றும் உளமாற உறுதி கூறுகிறேன்."

*உயிர் வாழ உதிரம் தேவை..* *அதற்கு வேணும் இரத்ததான சேவை....*

மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலுவலகம் - மாவட்ட ஆட்சியரகம், வேலூர்.

---

# தன்னார்வ ரத்த கொடையாளர்கள் விவரம் இணையதளத்தில் அறியலாம்: கலெக்டர்

வேலூர், நவ. 3–

வேலூர் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு சார்பில், வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் தன்னார்வ ரத்த தான நாள் நிகழ்ச்சியை கலெக்டர் ராமன் தொடங்கி வைத்து பேசியதாவது:

வேலூர் மாவட்டத்தில், அரசு சார்பில் 11 ரத்த வங்கி, 11 ரத்த சேமிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம், ரத்தம் தேவைப்படும் எல்லா நோயாளிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் தரமான ரத்தம் கிடைக்க வழிவகுக்கிறது. இந்த ரத்ததானம் மூலம் எடுக்கப்படும் ரத்தம், எச்ஐவி, இருவகை மஞ்சள் காமாலை, பால்வினை நோய், மலேரியா ஆகிய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தேவைப்படும் அரசு மருத்துவமனை நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த பரிசோதனைகளில் யாரேனும் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால், அவர்கள் அனுமதியோடு மேல்சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

மக்கள் பயன்பெறும் வகையிலும், பிரசவ காலங்களில் பெண்களுக்கான அதிக ரத்த இழப்பை ஈடுசெய்யும் வகையிலும் 24 மணி நேரமும் அரசு மருத்துவமனைகளில் ரத்த வங்கி செயல்படுகிறது. அதேபோல், பாதுகாப்பான ரத்தம் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, தன்னார்வ ரத்த கொடையாளர்கள் தங்கள் பெயர்களை இணையதளத்தில் பதிவு செய்யும் வகையில் அக். 1ம் தேதியன்று புதிய இணையதளம் (www.tngovbloodbank.in) தொடங்கப்பட்டது. இதன்மூலம் ரத்தம், ரத்தக்கூறுகள் மற்றும் பரிசோதனைக்கான உபகரணங்களின் கையிருப்பு, தன்னார்வ ரத்ததான முகாம் குறித்த விவரங்களை டாக்டர்கள் அறிந்து கொள்ளலாம். ஆண்டுதோறும் தன்னார்வ ரத்த கொடையாளர்கள் மற்றும் ரத்ததான முகாம் அமைப்பாளர்களை, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மூலமாக பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கின்றனர்.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

நிகழ்ச்சியில், சுகாதார மற்றும் குடும்ப நலம் இணை இயக்குனர் கலிவர்தன், சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் சுரேஷ், குடும்பநலப் பணிகள் துணை இயக்குனர் சாந்தி, அரசு மருத்துவக்கல்லூரி ரத்த வங்கி அலுவலர் பாஸ்கர், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்ட மேலாளர் கவிதா மற்றும் டாக்டர்கள், பள்ளி–கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.